மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்
மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்
மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்
மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்
மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்
மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்

தேர்ச்சி மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட மாதிரி வினாத்தாள்-2025

வினாத்தாள் I

5

சுட்டெண் : .....

ஒரு மணித்தியாலம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40 வினாக்கள்** உள்ளன. **எல்லா வினாக்களுக்கும்** உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதுக.
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளி	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

www.ikeu.lk

[பக். 2 ஐ பார்க்க

LEARNEASY

KNOWLEDGE IS POWER

தமிழ் & English Medium

தரம் 01 முதல் A/L வரையான வகுப்புக்கள்

ZOOM ஊடாக நடைபெறுகின்றன



தரம் 01 முதல் 05 வரை

- தமிழ்
- கணிதம்
- ஆங்கிலம்
- சுற்றாடல்
- நுண்ணறிவு
- வினாத்தாள் வகுப்பு
- பேச்சு ஆங்கிலம்
- பேச்சு சிங்களம்




தரம் 06 முதல் O/L வரை


- தமிழ்
- கணிதம்
- ஆங்கிலம்
- விஞ்ஞானம்
- வரலாறு
- வர்த்தகம்
- ICT
- English Literature
- தமிழ் இலக்கியநயம்
- சுகாதாரம்
- புவியியல்
- குடியியல்

76667-4945

01. பின்வரும் இரண்டு உருக்களையும் பற்றிக் குறிப்பிட்டுள்ள பிழையான கூற்று யாது?



உரு A




உரு B

(1) உரு A இல் வீடு வரையப்பட்டுள்ள அதே விதத்தில் உரு B இலும் வீடு வரையப்பட்டுள்ளது.

(2) உரு A இல் உள்ள விலங்குகளின் எண்ணிக்கையும் உரு B இல் உள்ள விலங்குகளின் எண்ணிக்கையும் சமமாகும்.


(3) உரு A இல் உள்ள மரங்கள் உரு B இலும் அவ்வாறே காணப்படுகின்றன.

02. பெட்டியில் உள்ள உருக்களை அவற்றின் வடிவத்திற்கும் பருமனிற்கும் ஏற்ப குவியல்களாக வேறுபடுத்தினால் கிடைக்கும் குவியல்களின் எண்ணிக்கை யாது?




(1) 4 (2) 5 (3) 6

03. உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்காக உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?



A உருவம்



B உருவம்

(1) 3 (2) 4 (3) 5

• வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

04. தவிலுக்கும் உடுக்கைக்கும் மத்தளத்துக்கும் தோற்கருவிகள் போன்று நாதஸ்வரத்துக்கும் மகுடிக்கும் புல்லாங்குழலுக்கும் .....

(1) துளைக் கருவிகள் (2) நரம்புக் கருவிகள் (3) கஞ்சக் கருவிகள்

[பக். 3 ஐ பார்க்க

www.lkedu.lk

சுட்டெண் : .....

05. பின்வரும் வாக்கியத்தில் உள்ள இரு வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொற்சோடி யாது?

வனங்கள் எங்களின் பாதுகாப்புக் கவசங்கள் ஆகும். அவற்றை.....


பாதுகாத்து ..... சமநிலையைப் பேணுவோம்.

(1) கவனமாக, எங்களின்

(2) அன்போடு, இயற்கையின்

(3) அழியவிடாது, சூழல்

06. கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க?



(1) 

(2) 

(3) 

07. நிலத்தில் நீராய் நானிருந்தேன்

நீராவி யாகி வானம் வந்தேன்

சுற்றிச் சுழன்று முகிலானேன்

சுற்றம் குளிர பூமி தொட்டேன்

இக் கருத்து மிக நன்றாகப் பொருந்துவது

(1) நீராவிக்கு (2) மழைக்கு (3) நீருக்கு

08. கடனில்லாக் கஞ்சி கால்வயிறு போதும் என்ற பழமொழியின் கருத்து

(1) கஞ்சி குடிப்பதற்கு ஒரு அளவைப் பே‌ண வேண்டும்.

(2) கஞ்சி குடித்துக் கால் வயிற்றையேனும் நிரப்ப வேண்டும்.

(3) மானத்துடன் வாழ வேண்டும்.

09. குமாரின் சகோதரர் குணசீலன். லலிதாவின் கணவர் குமார். குணசீலனின் சகோதரர் ராஜன். ராஜனின் தந்தை சேகர். லலிதா சேகருக்கு என்ன உறவுமுறையானவர்?

(1) மருமகள் (2) பேர்த்தி (3) மகள்

10. ஓர் அனர்த்தம் காரணமாக ஜூன் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் உட்பட தொடர்ச்சியாக 10 நாட்களுக்கு ஒரு பாடசாலை மூடப்பட்டது. பாடசாலை மறுபடியும் திறக்கப்பட்ட தினம்.

(1) ஜூன் 25 வியாழக்கிழமை (2) ஜூன் 26 வியாழக்கிழமை (3) ஜூன் 26 வெள்ளிக்கிழமை

11. வருடமொன்றின் நவம்பர் மாதத்தின் இறுதி நாள் புதன்கிழமையாகும் எனின் அம்மாதத்திலுள்ள செவ்வாய்க்கிழமைகள் எத்தனை?


(1) 3 (2) 4 (3) 5

www.lkedu.lk

12. வாகனத்தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களினதும் கார்களினதும் மொத்த எண்ணிக்கை 45 ஆகும். அவற்றின் சில்லுகளின் மொத்த எண்ணிக்கை 124 ஆகும். வாகனத்தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை?


(1) 17 (2) 28 (3) 45

13.





A



B



C





D

அடைப்பினுள் உள்ள உருவை உருவாக்குவதற்குப் பயன்படுத்த வேண்டிய அதே விதத்தில் அமைந்த உருக்கள் இரண்டும் எவை?

(1) A உம் B உம் (2) B உம் C உம் (3) B உம் D உம்


14. பின்வரும் உருவிற் காட்டப்பட்டுள்ள திண்மம் அதில் உள்ள முறிந்த கோடு வழியே வெட்டப்பட்டு சமமான இரு பகுதிகளாக வேறுபடுத்தப்பட்டால் கிடைக்கும் வெட்டுமுகத்தின் வடிவம் யாது?





(1) (2) (3)

15. கீழே தரப்பட்டுள்ள ஐந்து உருக்களையும் பாருங்கள்



A **B** **C** **D** **E**

ஐந்து உருக்களிலும் இரண்டு உருக்கள் தொடர்மாறி உள்ளன. அவை ஒன்றுடனொன்று மாற்றீடு செய்யப்பட வேண்டும். அவ்வாறு மாற்றப்பட வேண்டிய இரு உருக்களையும் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்துக்களை உள்ளடக்கிய எழுத்துச் சோடி யாது?

(1) B,C (2) C,D (3) C,E

16. 6 ஆண்கள் ஒரு வேலையை நாள் ஒன்றிற்கு 10 மணி நேரம் வேலை செய்தால் 24 நாட்களில் செய்து முடிப்பர். 9 ஆண்கள் ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை செய்தால் எத்தனை நாட்களில் அவ்வேலையை செய்து முடிப்பர்?

(1) 20 (2) 25 (3) 30

www.lkedu.lk

[பக். 5 ஐ பார்க்க


17. பரீட்சை ஒன்றில் 25 வினாக்கள் வினவப்பட்டன. ஒவ்வொரு சரியான விடைக்கும் 4 புள்ளிகள் வழங்கப்படும் அதேவேளை ஒவ்வொரு பிழையான விடைக்கும் 1 புள்ளிகள் கழிக்கப்படும். அதன்படி இப்பரீட்சையில் 60 புள்ளிகள் பெற்ற ஒருவர் சரியாக விடையளித்த வினாக்களின் எண்ணிக்கை யாது?


(1) 08 (2) 17 (3) 25


18. ஒரு கடிகாரத்தின் மணித்தியால முள்ளிற்கும் நிமிட முள்ளிற்கும் இடையில் உள்ள கோணம் செங்கோணத்தை விடப் பெரிய கோணமாக வரும் சந்தர்ப்பம் எது?

(1) மு.ப 12.10 (2) பி.ப 1.15 (3) பி.ப 2.35

19. பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.







(1) 35 (2) 38 (3) 41

20. 7 சிலந்திகள் 7 நாட்களில் 7 கூடுகளை கட்டும் எனில் 1 சிலந்தி 1 கூட்டை எத்தனை நாட்களில் கட்டும்?

(1) 1 (2) 7 (3) 14

21. கமலன், விமலன், நிமலன் மூவரும் உயரமான ஆண்கள். கமலா, விமலா ஆகிய இருவரும் உயரம் குறைவான பெண்கள். கமலா, நிமலன் ஆகிய இருவரும் மாம்பழம் சாப்பிடுவதில்லை. இவர்களில் எவர் மாம்பழம் உண்பவரும் உயரம் குறைந்தவருமாவார்?

(1) விமலா (2) கமலா (3) நிமலன்

22. பின்வரும் உருவில் உள்ள கடிகாரத்தின் முகத்தை முகம் பார்க்கும் கண்ணாடியை நோக்கித் திருப்பி அக்கண்ணாடியினூடாகப் பார்க்கும் போது அக்கடிகார முகம் காட்டும் சரியான நேரத்தை தெரிவு செய்க.



(1) 1.50 (2) 2.50 (3) 10.10

23. காலையில் சூரிய உதயத்திற்கு பின் விஜயன் நடைப்பயிற்சி மேற்கொள்ளும்போது அவரது நிழல் சரியாக அவருக்கு பின்னால் விழுகிறது. இப்பொழுது அவர் வலப்புறம் திரும்பி சிறிது தூரம் சென்ற பின் மீண்டும் வலப்புறம் திரும்பி நடக்கிறார் எனில் இப்பொழுது எந்த திசையில் நடக்கிறார்?

(1) மேற்கு (2) கிழக்கு (3) வடக்கு

24. ஒரு வீதியில் நான்கு மின்கம்பங்களுக்கிடையே 15 கொடிகள் நாட்டப்பட்டுள்ளன. அதன்படி 21 மின்கம்பங்களுக்கு இடையே நாட்டப்பட்டுள்ள கொடிகளின் எண்ணிக்கை யாது?

(1) 50 (2) 100 (3) 105

[பக். 6 ஐ பார்க்க

www.ikeduk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

THE PIONEER IN ONLINE CLASSES

தரம் 6

2026

புதிய பிரிவு

பிரிவு 2

தமிழ்
செவ் : 8PM
சனி : 8PM

கணிதம்
திங் : 8PM
புதன் : 8PM

விஞ்ஞானம்
சனி : 6PM
ஞாயி : 6PM

வரலாறு
புதன் : 7PM
வெள் : 7PM

சிங்களம்
வியா : 7PM
ஞாயி : 8PM

ENGLISH
Tue : 6PM
Thur : 6PM

ICT
Wed : 6PM
Fri : 6PM

zoom

76667-4945

1 பாடம்
800/-
மாதம்

5 பாடங்கள்
3,000/-
மாதம்

7 பாடங்கள்
4,200/-
மாதம்

Easy to Learn (Pvt) Ltd
Wellawatte
8008392295

S.Kishokumar
Nelliyaddy Branch
86479603


S.Kishokumar
Jaffna University
162-2-001-7-0028670

0766674945


25. நண்பர்கள் ஐவருள் ராஜன் பிரேமிலும் பார்க்க உயரமானவன் அல்ல. ரங்கன் ரமணனிலும் பார்க்க குட்டையானவன். ஆனால் நந்தனிலும் பார்க்க உயரமானவன். நந்தனும் பிரேமும் ஒரே உயரமுடையவர்கள். இவர்களுள் மிகவும் உயரமானர் யார்?

(1) ரமணன் (2) நந்தன் (3) ரங்கன்

26.




சதுர வடிவமுள்ள ஒரு கடதாசி முறிந்த கோடு வழியே மடிக்கப்பட்டுள்ள விதம் A, B, C ஆகிய உருக்களில் காட்டப்பட்டுள்ளது. உரு C இல் காட்டப்பட்டுள்ளவாறு சிறிய பகுதிகளை வெட்டி அகற்றி கடதாசியை முற்றாக விரிக்கும்போது கிடைப்பது யாது?




(1) (2) (3)

27. நிகழ்வு ஒன்றின் ஐந்து சந்தர்ப்பங்கள் உருச் சட்டகத்தினுள் பின்வருமாறு காட்டப்படுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கு முறையாக வரக்கூடியது எது?



(1) B, D, C, E, A (2) B, D, C, A, E (3) A, C, D, B, E

28.



மேலே செவ்வக வடிவ காணியைச் சுற்றி ஒரே சமனான தூரத்தில் கம்பி தூண்கள் நாட்டப்பட்டுள்ளன. இக்காணியை A பக்கத்திலிருந்து நோக்கினால் 17 கம்பி தூண்கள் தென்படும். B பக்கத்திலிருந்து நோக்கினால் 9 கம்பித் தூண்கள் தென்படும். அதன்படி செவ்வக வடிவக் காணியைச் சுற்றியுள்ள மொத்த கம்பித் தூண்களின் எண்ணிக்கை யாது?


(1) 44 (2) 48 (3) 52

www.ikedu.lk

29. ஒரு வரிசையில் ஒருவருக்கொருவர் சமதூர இடைவெளியில் நின்று கொண்டிருந்தனர். சிம்ஹாவுக்கும் செஷாவுக்கும் நடுவில் பாத்திமாவும் சனாவுக்கும் சிம்ஹாவுக்கும் நடுவில் அம்லத்தும் நின்று கொண்டிருந்தனர். அதன்படி வரிசையில் நடுவே நின்று கொண்டிருப்பது.

(1) சிம்ஹா (2) பாத்திமா (3) அம்லத்

30. கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களின் மீது மையைப் பூசி அவ்விலக்கங்கள் எதிரே அச்சிடப்படுமாறு புள்ளிகோட்டின் வழியே தாளை இரண்டாக மடித்து விரிக்கும் போது புலப்படும் முறை



(1) (2) (3)


31. A, B, C, D, E மற்றும் F ஆகியோர் வட்ட மேசையில் ஒருவரையொருவர் பார்த்தவண்ணம் அமர்ந்துள்ளனர்.

- C என்பவர் A மற்றும் E க்கு இடையில் உள்ளார்.
- B என்பவர் D மற்றும் F க்கு இடையில் உள்ளார்.
- E மற்றும் D நேர் எதிரே உள்ளனர்.
- B க்கு வலப்பக்கம் F உள்ளார்.


இதற்கேற்ப A க்கு வலப்புறம் இரண்டாவதாக உள்ளவர் யார்?

(1) B (2) D (3) C

32. கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானியுங்கள்.




வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான உரு எது?



(1) (2) (3)

33. பூக்கள், தாமரைப்பூக்கள், மல்லிகைப்பூக்கள், செந்தாமரைப்பூக்கள் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பு பின்வரும் உருவில் வகைக் குறிக்கப்பட்டுள்ளது.



செந்தாமரைப்பூக்களை வகைக்குறிக்கும் எழுத்து யாது?

(1) B (2) C (3) D


[பக். 8 ஐ பார்க்க

www.lkedu.lk

34. சங்கரின் வயதுடன் 12 வருடங்களை கூட்டினால் அவன் மாலாவை விட 5 வருடங்களால் இளையவனாகின்றான். மாலாவின் தற்போதைய வயது 30 வருடங்களாயின் சங்கரின் தற்போதைய வயது யாது?

(1) 13 (2) 14 (3) 15

35. கீழே தரப்பட்ட உருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?




(1) 12

(2) 13

(3) 14

36. முழு உருவத்தினதும் பரப்பளவு அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின் எத்தனை மடங்காகும்?




(1) 4 (2) 8 (3) 16

37. ஒரு வகுப்பில் அஜித்தின் நிலையானது மேலிருந்து 11 மற்றும் கீழிருந்து 27 ஆகும். அதே வகுப்பில் அனுஜாவின் நிலையானது மேலிருந்து 14 எனில் அனுஜாவின் நிலை கீழிருந்து எத்தனையாவது?

(1) 22 (2) 23 (3) 24

- உருவில் ஒவ்வொரு பக்கத்திலும் நிற மை பூசப்பட்டுள்ள ஒரு திண்ம மரக்குற்றி தரப்பட்டுள்ளது. அதனை கோடுகள் வழியே வெட்டி பல சிறிய மரக்குற்றிகள் பெறப்பட்டன. அதனைக் கொண்டு **38, 39** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



38. மூன்று பக்கத்தில் மாத்திரம் நிற மை பூசப்பட்டுள்ள எத்தனை சிறிய மரக் குற்றிகள் கிடைக்கும்?

(1) 6 (2) 8 (3) 12

39. எந்த ஒரு பக்கத்திலும் நிற மை பூசப்படாத எத்தனை சிறிய மரக் குற்றிகள் கிடைக்கும்?

(1) 2 (2) 8 (3) 10

40. தரம் 10 வகுப்பில் 160 சென்றிமீற்றரை விட உயரமான 18 ஆண் பிள்ளைகள் உள்ளனர். இந்த அளவினர் வகுப்பில் உள்ள ஆண் மாணவர்களின் எண்ணிக்கையின் நான்கில் மூன்றாகும். அந்த வகுப்பில் உள்ள மொத்த ஆண் மாணவர்களின் எண்ணிக்கை வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிகையில் மூன்றில் இரண்டாகும். அந்த வகுப்பில் உள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 18 (3) 24

******

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

ICT

Grade 6 to O/L



76667-4945

BY : A.Nivethika

Grade 6	Grade 7	Grade 8
Wed:6PM	Fri:7PM	Wed:8PM
Fri:6PM	Sun:7PM	Sat:8PM

Grade 9	Grade 10	Grade 11
Mon:9PM	Mon:7PM	Tue:8PM
Thur:9PM	Thur:7PM	Wed:7PM
	Sun:8PM	Fri:8PM

மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்
மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்
மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்
மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்
மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்
மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்

தேர்ச்சி மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட மாதிரி வினாத்தாள்-2025

வினாத்தாள் II

5

சுட்டெண் : .....

ஒரு மணித்தியாலம் 15 நிமிடம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60 வினாக்கள்** உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
* விடைகளை எழுதுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளி	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	
	V/II/T/CH

www.ikeou.lk

[பக். 2 ஐ பார்க்க

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

விடியற் காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறுவிறுவெனக் கலப்பையோடு தம் வயல் நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி வருகின்றனர். புத்துணர்வோடு மாணவர்கள் புதுத்தேடலுடன் பள்ளி செல்கின்றனர். கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்க ஊழியர்கள் விரைகின்றனர்.

இயற்கை அன்னையின் படைப்பில் அனைத்தும் அற்புதமே. உலகிலுள்ள உயிரினங்களுக்கு உவகை அளிக்கும் காலைக் காட்சி மனதிற்கு இனிமையானது; மகிழ்ச்சிகரமானது.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) விடியற் காலையை எதிர்பார்த்திருந்தவர்கள் யார்?

.....

(ii) மனதிற்கு இனிமையளிப்பது எது?

.....

(iii) புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி வருகின்றவர்கள் யார்?

.....

(iv) 'கழனி' என்ற கருத்தைத் தரும் ஒத்த கருத்துச் சொல் இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்சொல்லை எழுதுக.

.....

(v) பந்தியில் இடம்பெற்றுள்ள அடுக்கு மொழிச் சொல் ஒன்றை எழுதுக.

.....

(vi) 'செயற்கை' என்பதன் எதிர் கருத்துச் சொல் இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்சொல்லை எழுதுக.

.....

2. நிகழ்கால பன்மை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(1) பிரகாசிக்கிறது (2) பிரகாசித்தன (3) பிரகாசிக்கின்றன

3. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

அனைவரும் / சிறப்புடன் / தமது / செய்தனர் / மிகவும் / பொறுப்புக்களை

.....

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு **சரியாயின்** " **√** " எனவும் **பிழையாயின்** " **x** " எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.

(i) பறவைக் கூட்டம் பறந்து சென்றன. (.....)

(ii) கீதா மேடை நாடகம் பார்க்கிறாள். (.....)

(iii) திவ்யா இனிமையான குரலில் பாடலைப் பாடினர். (.....)

(iv) பலத்த மழையினால் மரம் இடிந்து விழுந்தது. (.....)

(v) மாணவர்கள் பாடசாலைச் சஞ்சிகைக்கு ஆக்கங்களை வழங்கினர். (.....)

[பக். 3 ஐ பார்க்க

www.lkedu.lk

சுட்டெண் : .....

5. பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் சரியான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(i) (1) கலாசாரம் (2) கலாச்சாரம் (3) கலாசாறம்

(ii) (1) சோம்பரி (2) சோம்பேரி (3) சோம்பேறி

(iii) (1) சீயக்காய் (2) சிகைக்காய் (3) சீயாக்காய்

6. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரும் வெளிப்படுத்தும் கருத்தை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து கீறிட்ட இடங்களில் எழுதுக.

(i) முகங்கொடுத்தல் : .....

(ii) தட்டிக் கொடுத்தல் : .....

(உற்சாகப்படுத்துதல் / குற்றத்தை மறைக்கப்பார்த்தல் / எதிர்கொள்ளல் / அறிவு உண்டாதல்)

7. பின்வரும் வாக்கியத்தை எழுத்து மொழியாக மாற்றி எழுதுக.

(i) நாங்க கவிதைப் புத்தகம் வாசிக்கிறம்.

.....

(ii) அவன் நினைச்சது எல்லாம் நடந்தது.

.....

8. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

தீமை செய்தால் தீமை வரும்.

.....

9. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்ப்பாற் சொற்களை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.


(i) இடையன் : ..... (ii) குணவதி : .....

10. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

நீர்வளம் குறைந்த நிலத்தை வானம் பார்த்த பூமி என விவசாயிகள் கூறுவர்

11. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை தரப்பட்டுள்ள கட்டத்தினுள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i) 

(ii) 

12. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

(i) our / This / wall / is / school : .....

(ii) weekends / beach / I / at / go / the / to : .....

13. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

(i) Coconut : .....

(ii) Egg : .....

www.lkedu.lk

14. 'ஷிஷ்யாவ (ශිෂ්‍යාව)' என்ற சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக. .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

எனக்குத் தண்ணீர் வேண்டும்.....

16. 36096, 36069 ஆகிய இரு எண்களிலும் பெரிய எண்ணை எழுத்தில் எழுதுக.

.....

17.

6	4
2	8

அடைப்புக்குள் உள்ள எல்லா இலக்கங்களையும் கொண்டு ஒன்றினிடம் , ஆயிரத்தினிடம் ஆகிய இடங்கள் இரண்டிலும் 6 ஐப் பயன்படுத்தி ஐந்து இலக்கங்கள் கொண்ட ஓர் எண்ணை எழுதுக. .....

18. பின்வரும் நான்கு எண்களையும் இறங்கு வரிசையில் மீண்டும் எழுதுக.

26771, 26717, 16034, 16304.....

19. பின்வரும் எண் கோலத்தை இனங்கண்டு இரண்டு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான இரண்டு எண்களையும் எழுதுக.

..... 33, 37, 41, 45, ...

20. ஒரு வியாபாரி வாங்கிய 244 மாம்பழங்களில் 3/4 விற்றான். அவன் விற்பனை செய்த மாம்பழங்களின் எண்ணிக்கை யாது ?.....

21. நேரம் முற்பகல் ஆறு மணி இருபது நிமிடம் என்பது இருபத்துநான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் (நியம) விதத்தைப் பின்வரும் அடைப்பினுள் எழுதுக.

..... : .....

22. ஒரு பெட்டியில் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை 6 ஆகும். அத்தகைய 48 பெட்டிகளில் உள்ள பென்சில்கள் 4 வகுப்புகளிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஒரு வகுப்பிற்குக் கிடைத்த பென்சில்களின் எண்ணிக்கை யாது? .....

23.



(i) உருவில் நிழற்றப்பட்ட பகுதி எத்தனை 'ஐந்தின் பங்கு' ஆகும் ?

.....

(ii) இவ் உருவில் நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணாக எழுதுக.

.....

24. 5kg 750g பாசிப்பயற்றை, ஒரு பையில் 250g வீதம் எத்தனை பைகளில் இடலாம்? :.....

25. 6 மீற்றர் நீளமுள்ள துணியில் உடை ஒன்றைத் தைப்பதற்கு 2 மீற்றர் 75 சென்ரிமீற்றர் அளவை வெட்டி நீக்கினால் மீதியாக உள்ள துணியின் அளவு எவ்வளவு? :.....m.....cm

26. ஒரு தாங்கியில் 13 லீற்றர் நீரும் வேறோரு தாங்கியில் 6 லீற்றர் 50 மில்லிலீற்றர் நீரும் உள்ளன. இரண்டு தாங்கிகளிலும் உள்ள நீரின் அளவுகளிடையே உள்ள வித்தியாசம் யாது?

: ..... லீற்றர்.....மில்லிலீற்றர்

www.lkedu.lk

Teach : **S.Farwin**

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Online Class zoom



இரண்டாம் மொழி

சிங்களம்

தரம் 6	Mon 6 PM || Thur 7 PM
தரம் 7	Mon 6 PM || Thur 6 PM
தரம் 8	Fri 8 PM || Sat 8 PM
தரம் 9	Fri 8 PM || Sat 7 PM

தரம் 6-9


76667-4945

மாதம் 800/-

27. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.


பொருள்	வாங்கிய அளவு	ஒரு கிலோகிராமின் விலை		பெறுமதி	
		ரூபாய்	சதம்	ரூபாய்	சதம்
அரிசி	3 kg	105	00	(i)	.....
பருப்பு	250 g	(ii)	.....	26	50
மொத்தப் பணம்				341	50

28. உருவில் காட்டப்பட்டுள்ள திண்மப் பொருளின் பெயரை எழுதுக.



: .....

29. மாணவர் குழுவொன்று அதிகம் விரும்பும் மலர் வகைகள் பற்றிய தகவல்கள் வரைபில் தரப்பட்டுள்ளன.



(i) ஒக்கிட் மலரை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை, ரோசா மலரை விரும்பும் மாணவர்களின் எண்ணிகையை விட எவ்வளவு கூடுதலானது?.....

(ii) குழுவில் உள்ள மொத்த மாணவர் தொகை எவ்வளவு? .....

- **31** தொடக்கம் **60** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக**.

30. சூரிய நமஸ்காரம் செய்வதால் ஏற்படும் நன்மை எனக் கூற முடியாதது எது?

(1) மன அமைதி, ஒருமைப்பாடு ஏற்படும்.

(2) விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அதிகரிக்கும்.

(3) கோபம், பொறாமை உணர்வு அதிகரிக்கும்.

31. தேசியக் கொடியில் முழுக் கொடியையும் சுற்றி வர இடப்பட்டிருக்கும் மஞ்சள் நிறப்பட்டி குறிப்பது

(1) கொடியின் முழுமைப்பாடும் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையும்

(2) தேசத்தின் மகத்துவம்

(3) பல்வேறு இனங்களின் பிரதிநிதித்துவம்

32. அரச இலச்சினையில் உள்ள பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருக்கும் வாளேந்திய சிங்கத்தினால் குறிப்பிடப்படுவது

(1) சௌபாக்கியமும் பொலிவும் (2) தன்னிறைவும் செழிப்பும் (3) நாடும் கட்டுப்பாடான மக்களும்

[பக். 6 ஐ பார்க்க

www.lkedu.lk

33. இலங்கைக்கு உன்னத சேவையை ஆற்றியவரும் இப்படத்தில் காணப்படுபவருமான பெரியார் யார்?



(1) ஆனந்த சமரக்கோன்
(2) W.D.அமர தேவ
(3) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

34. ஓவியம் ஒன்றுக்கு வர்ணம் தீட்டுவதற்குத் தேவையான பச்சை நிறத்தை ஆக்குவதற்குச் சமமான அளவில் கலக்கக்கூடிய இரண்டு நிறங்களும் எவை?

(1) நீலமும் மஞ்சளும் (2) நீலமும் சிவப்பும் (3) சிவப்பும் கறுப்பும்

35. குழுவாக வேலை செய்வதால் கிடைக்கும் நன்மையாக அமையாதது

(1) கூட்டுணர்வு ஏற்படும்
(2) அதிக நேரம் தேவைப்படாது
(3) வேலைக் களைப்பு அதிகம்

36. விற்றமின் B பெருமளவில் அடங்கிய உணவு

(1) நெல்லிக்காய் (2) முளைக்கீரை (3) ஈரப்பலா

37. 'கொழுப்புப்' போசணை உடலுக்குத் தேவையான அளவு கிடைக்காத போது ஏற்படும் நிலைமை

(1) உடலின் நிறை குறைதல்
(2) பசியை உணர முடியாதிருத்தல்
(3) உடல் பொலிவு இழத்தல்

38. வெந்நீர்க்கேத்தல் புரண்டதால் எரிகாயம் ஏற்பட்டு விபத்து நிகழ்ந்த சந்தர்ப்பத்தில் நாம் செய்யக்கூடியது

(1) எரிகாயம் ஏற்பட்ட இடத்தில் வழிந்து செல்லுமாறு தண்ணீரை ஊற்றுதல்
(2) துணியால் இறுகக் கட்டுதல்
(3) பற்பசை போன்ற களிம்புகள் பூசுதல்

39. களனிப் பள்ளத்தாக்குப் புகையிரதப் பாதை எவ்விரு நகரங்களுக்கு இடைப்பட்டது ?

(1) கொழும்பிலிருந்து மாத்தறை
(2) கொழும்பிலிருந்து அவிசாவளை
(3) கொழும்பிலிருந்து மட்டக்களப்பு

40. நுகத்தடி பயன்படுத்தப்படுவது

(1) உலோகக் கைத்தொழில் (2) உழவுத் தொழில் (3) மட்பாண்டக் கைத்தொழில்

41. அரசாங்க நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான தகவலை அறிவதற்குத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்

(1) 1919 (2) 1929 (3) 1911

42. நுட்பமாக கூடுகட்டும் திறன் கொண்ட பிராணி எது ?

(1) தச்சன் குருவி (2) தேன்குருவி (3) மரங்கொத்தி

43. மஞ்சள் நிறப்பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞை எதனைக் குறிப்பிடுகிறது.



(1) பாதுகாப்புடன் கூடிய புகையிரதக்கடவை வீதிக்கு முன்னால்
(2) பாதுகாப்பில்லாத புகையிரதக்கடவை வீதிக்கு முன்னால்
(3) வீதி எதிரே மூடப்பட்டுள்ளது

www.lkedu.lk

[பக். 7 ஐ பார்க்க

44. பானப் போத்தலில் உள்ள பானத்தில் அடங்கியுள்ள சீனி, மத்திம அளவில் உள்ளது என்பதனையும் சீனி அதிகமாக உள்ளது என்பதனையும் காட்டுவதற்கு பானப் போத்தலில் பயன்படுத்தப்படும் வட்ட வடிவக் குறியீடுகளின் நிறங்கள் முறையே எவை ?

(1) பச்சை, மஞ்சள் (2) மஞ்சள், சிவப்பு (3) சிவப்பு, பச்சை

45. தேசப்படம் ஒன்றில் புகையிரப்பாதை, பெருந்தெரு, சிறுவீதி ஆகியன காட்டப்பட்டுள்ள நிறங்கள் முறையே எவை?

(1) கறுப்பு, சிவப்பு, ஊதா (2) கறுப்பு, சிவப்பு, மஞ்சள், (3) கறுப்பு, மஞ்சள், ஊதா

46. சீதபேதி நோய் பரவுவது

(1) நோய்க்காவி இலையான் மூலமாகும்

(2) நோய்க்காவி தனிநபர் மூலமாகும்

(3) அசுத்தமான உணவு, நீர் உட்கொள்ளல் மூலமாகும்


47. கலா வாவியைக் கட்டுவித்த அரசன்

(1) தாதுசேனன் (2) தேவநம்பிய தீசன் (3) மகாசேனன்

48. காந்தத் துண்டை நோக்கிக் கவரப்படும் பொருள் சோடி

(1) பித்தளையும் இரும்பும் (2) இரும்பும் அலுமினியமும் (3) இரும்பும் உருக்கும்

49. இச் சுதேச ஆக்கம் செய்வதற்குப் பயன்பட்ட பொருள்கள்



(1) வாழைநடுத்தண்டு, குருத்தோலை

(2) குருத்தோலை, அரக்கு

(3) பன்புல், வாழைநடுத்தண்டு

50. கொழும்பு, இரத்தினபுரி, மட்டக்களப்பு ஆகிய நகரங்களை இணைக்கும் பெருந்தெரு எது ?

(1) A9 (2) A1 (3) A4

51. படத்தில் காட்டப்படுவது



(1) அழிப்பான் (2) கைக்குட்டை (3) குண்டூசி தாங்கி

52. புற்கள் உள்ள தரையொன்றில் காணப்பட்ட பலகையைத் தூக்கியபோது பலகையின் கீழ்ப்பகுதியில் உள்ள புற்கள் மஞ்சள் நிறமாகக் காணப்பட்டன. இதற்கான காரணமாக அமைவது

(1) நீர் போதாமை

(2) சூரிய ஒளி கிடைக்காமை

(3) வளமான மண்ணாக இருக்காமை

53. உணவு, பானங்களாக மட்டுமன்றி ஒளடதங்களாகவும் பயன்படுத்தப்படுகின்ற பூக்களாக அமைபவை

(1) அகத்திப் பூ, வாழைப் பூ

(2) கறிவேப்பிலை, வில்வம் பூ

(3) பொன்னாவரைப் பூ, வில்வம் பூ

54. தெறியோட்டைத் தைப்பதற்கு மிகப் பொருத்தமான தையல் முறை

(1) சங்கிலித் தையல் (2) கம்பளித் தையல் (3) நரம்புத் தையல்

www.lkedu.lk

55. இலங்கையின் தேசிய விளையாட்டு, தேசிய மலர் என்பவற்றை ஒழுங்குமுறையில் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.

(1) எல்லே, அல்லி (2) வொலிபோல், அல்லி (3) வொலிபோல், நீலோற்பலம்

56. வெடித்தல் மூலம் பரம்பலடையும் வித்துக்களைக் கொண்ட தாவரம்

(1) காசித்தும்பை (2) எண்ணை (3) துத்திரி

57. ஒரு குறித்த காலத்திலன்றி வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவர வகை பின்வருவனவற்றுள் எது?

(1) வாழை (2) முள்முருக்கு (3) இறப்பர்

58.



மேலே காட்டப்பட்ட உடுக்கோலத்துக்கு வழங்கும் பெயர் யாது ?

(1) பெருநாய் (2) விருச்சிகம் (3) பெருங்கரடி

59. பின்வருவனவற்றுள் எது நீருடன் பிணைந்த கிறிஸ்தவர்களுடைய சமயப் பழக்கவழக்கம் ?

(1) நீர் நிரம்பிய நிறைகுடம் ஒன்றினை முன்னே வைத்தல்

(2) பெரிய வியாழனன்று சீடர்களின் பாதந் தோய்த்தல்

(3) புதுமணத் தம்பதிகளுக்கு கையில் நீர் வார்த்தல்

60. குமார் தினமும் பாடசாலைக்கு நடந்தே செல்வான். அன்றும் பாடசாலைக்கு நடந்து சென்று கொண்டிருக்கையில் அழகிய பூனைக்குட்டி ஒன்று வீதியில் மகிழ்ச்சியுடன் துள்ளி ஓடியது. அதே நேரம் எதிர் முனையில் பேருந்து ஒன்று வேகமாக வந்துகொண்டிருந்தது. இச் சந்தர்ப்பத்தில் நீர் தான் குமார் என்று நினைத்து அதன் பின்னர் செய்தவை பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

*****

www.ikedu.lk

English

Literature

LEARN EASY
KNOWLEDGE IS POWER

ZOOM

76667-4945

MONTHLY 3,000/-

Grade 10	Tue 6PM-8PM	Wed 7PM-8PM
Grade 11	Sat 7PM-9PM	Wed 8PM-9PM

By : G.Gnanalosan

COMMERCIAL BANK	BOC BANKERS TO THE NATION	PEOPLE'S BANK	eZ Cash
Easy to Learn (Pvt) Ltd Wellawatte 8008392295	S.Kishokumar Nelliyaddy Branch 86479603	S.Kishokumar Jaffna University 162-2-001-7-0028670	0766674945

தேர்ச்சி மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட மாதிரி வினாத்தாள்-2025

5

வினாத்தாள் I ற்கான விடைகள்

1- 3	11- 3	21- 1	31- 1
2- 3	12- 2	22- 1	32- 2
3- 2	13- 2	23- 1	33- 3
4- 1	14- 3	24- 2	34- 1
5- 3	15- 3	25- 1	35- 2
6- 1	16- 1	26- 3	36- 2
7- 2	17- 2	27- 2	37- 3
8- 3	18- 3	28- 2	38- 2
9- 1	19- 3	29- 1	39- 1
10-3	20- 2	30- 2	40- 1

(2×2.5= 100 புள்ளிகள்)

வினாத்தாள் II ற்கான விடைகள்

வினா இல	விடை	புள்ளிகள்
1	(i) விவசாயிகள் (ii) காலைக் காட்சி / உவகை அளிக்கும் காலைக் காட்சி / உயிரினங்களுக்கு உவகை அளிக்கும் காலைக் காட்சி / உலகிலுள்ள உயிரினங்களுக்கு உவகை அளிக்கும் காலைக் காட்சி (iii) வியாபாரிகள் (iv) வயல் (v) வண்ண வண்ண (vi) இயற்கை	01 01 01 01 01 01
2	(3) பிரகாசிக்கின்றன	01
3	அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர். / தமது பொறுப்புக்களை அனைவரும் மிகவும் சிறப்புடன் செய்தனர்.	01
4	(i) X (ii) ✔ (iii) X (iv) ✔ (v) ✔	01 01 01 01 01

www.ikedu.lk

5	(i) (1) கலாசாரம் (ii) (3) சோம்பேறி (iii)(2) சிகைக்காய்	01 01 01
6	(i) எதிர்கொள்ளல் (ii) உற்சாகப்படுத்துதல்	01 01
7	(i) நாங்கள் கவிதைப் புத்தகம் வாசிக்கி(ன்)றோம். (ii) அவன் நினைத்தது எல்லாம் நடந்தது.	01 01
8	முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் (தரம்-04 தமிழ் பக்.46) / முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும். (தரம்-05 தமிழ் பக்.85)	01
9	(i) இடைச்சி (ii) குணவான்	01 01
10	நீர்வளம் குறைந்த நிலத்தை "வானம் பார்த்த பூமி" என விவசாயிகள் கூறுவர். (ஒற்றை மேற்கோட்குறி (‘ ’) இடப்பட்டிருப்பினும் புள்ளி வழங்குக. மேற்கோட்குறியும் முற்றுப்புள்ளியும் சரியாக இடப்பட்டிருப்பின் மட்டும் புள்ளி வழங்குக.)	01
11	(i) T o o t h b r u s h (ii) E l e p h a n t **சிற்றெழுத்துக்கள், பேரெழுத்துக்கள் மாறிமாறி எழுதியிருப்பினும் புள்ளி வழங்குக.**	01 01
12	(i) This is our school wall. (ii) I go to the beach at weekends. **பிரதி செய்து எழுதப்படுவதால் எழுத்துப் பிழையின்றி எழுதப்பட வேண்டும்.**	01 01
13	(i) தேங்காய் (ii) முட்டை	01 01
14	மாணவி	01
15	மட்ட வத்துர ஒன. / மட வதுர ஒன.	01
16	முப்பத்தாறாயிரத்துத் தொண்ணூற்றாறு / முப்பத்தாறாயிரத்துத் தொண்ணூற்று ஆறு முப்பத்து ஆறாயிரத்துத் தொண்ணூற்றாறு / முப்பத்து ஆறாயிரத்துத் தொண்ணூற்று ஆறு	02
17	26486 / 26846 / 46286 / 46826 / 86426 / 86246	02
18	26771, 26717, 16304, 16034	02
19	29, 49 (ஒரு எண் மட்டும் சரியாக எழுதப்பட்டிருப்பின் 01 புள்ளி வழங்குக.)	02
20	183 / 183 மாம்பழங்கள்	02
21	06:20	02
22	72 / 72 பென்சில்கள்	02
23	(i) 2 / $\frac{2}{5}$ (01 புள்ளி) (ii) 0.6 (01 புள்ளி)	02
24	23	02
25	3m 25cm	02
26	6 லீற்றர் 950 மில்லிலீற்றர்	02
27	(i) 315.00 (02 புள்ளிகள்) (ii) 106.00 (02 புள்ளிகள்)	04
28	நான்முகி	02
29	(i) 5 (01 புள்ளி) (ii) 46 (01 புள்ளி)	02

www.ikedu.lk

30- 3	40- 2	50- 3
31- 1	41- 1	51- 3
32- 3	42- 2 (தரம்-03 ஆசிரியர் வழிகாட்டி பக்.147)	52- 2
33- 3	43- 1	53- 3
34- 1	44- 2	54- 2
35- 3	45- 2	55- 3
36- 2	46- 3	56- 1
37- 3	47- 1	57- 1
38- 1	48- 3	58- 3
39- 2	49- 1	59- 2

60. **03 சரியான வாக்கியங்கள்**

வாக்கியங்களை மதிப்பிடுவதற்கான அறிவுறுத்தல்கள்

1. சரியான 3 வாக்கியங்களுக்கு 02 புள்ளிகள் வீதம் (02 x 3) 06 புள்ளிகள் வழங்குக.

ii. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து (5) சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.

iii. எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியானதாக இருத்தல் வேண்டும்.

iv. எழுத்துப் பிழைகள் இல்லாதிருத்தல் வேண்டும்.

V. தலைப்பிற்குப் பொருத்தமானதாக எழுதப்பட்ட வாக்கியங்களாக அமைதல் வேண்டும்.

vi. எழுத்து வழக்கில் அமைந்த வாக்கியங்களாக இருத்தல் வேண்டும்.

vii. வாக்கியத்தின் கருத்து தெளிவாக வெளிப்படல் வேண்டும்.

viii. ஒரே கருத்துடைய வாக்கியத்தை மீண்டும் மீண்டும் எழுதியிருப்பின் புள்ளி வழங்க வேண்டாம்.

ix. **வாக்கியங்கள் இறந்தகாலத்தில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.**

- **வாக்கியத்திற்கு ஒரு புள்ளி வழங்குவதற்கான அறிவுறுத்தல்**

வாக்கியமொன்றில் ஓர் எழுத்துப் பிழை மட்டும் இருப்பின் 01 புள்ளி மட்டும் வழங்குக. ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துப் பிழைகளிருப்பின் புள்ளி வழங்க வேண்டாம்.

1-15 - 32 புள்ளிகள்

16-29 - 30 புள்ளிகள்

30-59 - 30 புள்ளிகள்

60 - 06 புள்ளிகள்

உறுப்பெழுத்து - 02 புள்ளிகள்

மொத்தப்புள்ளிகள் - 100

www.ikeou.lk